# வள்ளல் பெருமானின் உபதேசக் குறிப்புகள்

(சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள்)



# “எழுவகைப் பிறப்பு” - விளக்கம்

## பகுதி 9 - 08/06/2025



வழங்குபவர்

**திரு. லோக. ஆனந்த பாரதி**

**Vallalar Universal Mission - USA**

# எழுவகைப் பிறப்பு

- ✓ இக்குறிப்பு, ஆ. பாலகிருஷ்ணப் பிள்ளை அவர்களின் பதிப்பில் திருவார்த்தைக் குறிப்புக்களில் 34-வது குறிப்பாக 'எழுவகைப் பிறவி' என்னும் தலைப்பிலும்,
- ✓ ஊரன் அடிகளார் பதிப்பில், "எழுவகைப் பிறப்பு" என்னும் தலைப்பில் 11 வது குறிப்பாகவும் அமைந்துள்ளது.
- ✓ "பிறப்பு (23)" "ஜென்மம்(139)" இது தொடர்பான ஆ. பாலகிருஷ்ணப் பிள்ளை அவர்களின் பதிப்பில் சிறு குறிப்பு ஆகும்.
- ✓ இந்த உடம்பில் உயிர்களுக்கு உண்டாகின்ற பல்வேறு பிறப்புக்களைக் குறித்தும், மனிதப் பிறப்பின் சிறப்பும், மறுபிறவி உண்டாகும் காலம் முதலியன குறித்து வள்ளற்பெருமான் இந்த உபதேசக் குறிப்பிலே அன்பர்களுக்கு விளக்கி இருக்கின்றார்.

# எழுவகைப் பிறப்பு

- ✓ இந்தத் தேகத்திற்குப் பிறப்பு 7 உண்டு.
- ✓ அது போல் எழுவகைப் பிறப்பிலும் ஒவ்வொரு பிறப்பிற்கு எவ்வேழு பிறப்புண்டு.
- ✓ அந்த எவ்வேழு பிறப்பும் ஒவ்வொன்றில் அனந்தமாய் விரிந்த யோனிபேதங்களின் விரிவெல்லாம் தோன்றி மேலேறி மறுபிறவி உண்டாம்.
- ✓ ஒவ்வொரு பிறவியும் எந்தக் கற்பத்தில் நஷ்டமடைகின்றதோ அந்தக் கற்பகாலம் வரையில் தோற்ற மில்லாமல் மண்ணில் மறைந்திருந்து, மறுகற்பத்தில் தோன்றி, இவ்விதமாகவே மற்றயோனிகளிடத்திலும் பிறந்து, முடிவில் இத்தேகங் கிடைத்தது.

---

விளக்கக் குறிப்புகள்: (ஆனந்த பாரதி)

யோனிபேதங்கள் – தாவர, ஊர்வன, நீர் உயிர்கள், விலங்கு முதலிய வர்கங்கள்.

கற்பம் - 4.32 பில்லியன் ஆண்டுகள் (பிரம்மாவின் ஒரு பகல்),
பிரளயம் - 4.32 பில்லியன் ஆண்டுகள் (பிரம்மாவின் ஒரு இரவு),
சேர்ந்து - 8.64 பில்லியன் ஆண்டுகள் பிரம்மாவின் ஒரு நாள்

நாம் தற்போது “ஸ்வேதா வராக” கல்பத்தில் (பிரம்மாவின் 51வது ஆண்டின் முதல் மாதம்; 1வது நாள்) வாழ்ந்து வருகின்றோம்.

# எழுவகைப் பிறப்பு

**இத்தேகத்திற்கும் ஏழு பிறவி யுண்டு(ஸ்தூலப்பிறப்பு) யாதெனில்:-**

1. கர்ப்பத்தில் ஐந்து மாதம் வரையில் குழவியாயிருப்பது ஒன்று,
2. அவயவாதி உற்பத்திக் காலம் ஒன்று,
3. பிண்டம் வெளிப்பட்ட காலம் ஒன்று,
4. குழந்தைப் பருவம் ஒன்று,
5. பாலப்பருவம் ஒன்று,
6. குமாரப்பருவம் ஒன்று,
7. விருத்தப்பருவம் ஒன்று

ஆகப் பிறவி 7.

இவ்வாறே தாவர முதலியவற்றிற்கு முளை.

# எழுவகைப் பிறப்பு

மேலும்,

1. ஸ்தூலப் பிறப்பு 7,
2. சூட்சுமப் பிறப்பு 7,
3. காரணப்பிறப்பு 7. ஆதலால், மேற்குறித்தது ஸ்தூலப்பிறப்பு,

**சூட்சுமப் பிறப்பு யாதெனில்:**

1. ஜாக்கிரம்,
2. சொப்பனம்,
3. சுழுத்தி,
4. ஜாக்கிரத்தில் சொப்பனம்,
5. ஜாக்கிரத்தில் சுழுத்தி,
6. சொப்பனத்தில் சொப்பனம்,
7. சொப்பனத்தில் சுழுத்தி

ஆக பிறப்பு 7.

---

விளக்கக் குறிப்புகள்: (ஆனந்த பாரதி)

காரிய அவத்தைகள் 5:

1. நனவு (ஜாக்கிரம்) - உயிர்புருவ நடுவிலிருந்து செயல்படும்.
2. கனவு (சொப்பனம்) - கண்டத்திலிருந்து உயிர்செயல்படும்.
3. உறக்கம் (சுழுத்தி) - உயிர் இருதயத்திலிருந்து செயல்படும்
4. பேருறக்கம் (துரியம்) - உயிர் உந்தியிலிருந்துசெயல்படும்.
5. உயிர்ப்படக்கம் (துரியாதீதம்) - உயிர் உந்தியிலிருந்துசெயல்படும்.

# எழுவகைப் பிறப்பு

காரணப்பிறப்பு :

மனோ சங்கற்பங்களெல்லாம் பிறவி.

ஆதலால் மேற்குறித்த பிறவிக்குக் காரணம் நினைப்பு மறைப்பு. அது அற்றால் பிறவியில்லை.

எப்படி அறுமெனில்:

பரோபகாரம் சத்விசாரம் - இவ்விரண்டாலும் மேற்குறித்தது நீக்கிச் சிவானுபவம் பெறலாம்.

ஜென்மம் (சிறு குறிப்பு):

பூர்வஜென்மம் என்பது கர்ப்பகோளவாசம். உத்தரஜென்மம் என்பது ஜனனகாலம்.

*

# துணை நூல்கள்

- ✓ திருஅருட்பா ஆறு திருமுறைகள்
- ✓ உபதேசப் பகுதி - பாலகிருஷ்ணன் பிள்ளை பதிப்பு - நான்காம் புத்தகம்.
- ✓ திருஅருட்பா உரைநடை - ஊரன் அடிகள் பதிப்பு.
- ✓ திருஅருட்பா - ச.மு.கந்தசாமிப் பிள்ளை பதிப்பு.
- ✓ திருஅருட்பா உரைநடை - தெய்வ நிலையப் பதிப்பு.

# வள்ளல் பெருமானின் உபதேசக் குறிப்புகள்

(சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள்)

## ஐயம் தெளிதல்...



# வள்ளல் பெருமானின் உபதேசக் குறிப்புகள்

(சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள்)

## “எழுவகைப் பிறப்பு” - விளக்கம்



**பகுதி 9 - 08/06/2025**

வழங்குபவர்

**திரு. லோக. ஆனந்த பாரதி**

**Vallalar Universal Mission - USA**